ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2418/22 - 2025 ජනවාරි මස 08 වැනි බදාදා - 2025.01.08

2418/22 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2024 ஆம் ஆண்டின் 110 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/12/2018/WS/293.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: BD/BW/LND/6/AQUIS/46.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்த ரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப் பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“ மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2024, திசெம்பர் 04.

### அட்டவணை

I **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், பண்டாரவளை.

II **காணியின் விபரம்** : ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செலாளர் பிரிவில் மஹபலாத கோறளே சிறு பிரிவில் அயிஸ்லெப் (78N ) கிராம அலுவலர் பிரிவில், எத்தலபிட்டிய (இ.கி.வ 26) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத் தினால் தயாரிக்கப்பட்ட 2020.02.20 ஆந் திகதிய B/BND/2019/347 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத் தைக் கொண்ட காணித் துண்டின் எல்லகள்:

01. **துண்டு ‘A’ – அயிஸ்லெப்வத்தை - விஸ்தீரணம்: 0.2023 ஹெக்டயார்**
வடக்கு : தோட்ட வீதி மற்றும் வரையறுக்கப்பட்ட மல்வத்தை பெருந்தோட்ட கம்பனி உரிமைகோரும் அயிஸ்லெப்வத்தை கேஷன் பகுதி; கிழக்கு: வரையறுக்கப் பட்ட மல்வத்தை பெருந்தோட்ட கம்பனி உரிமைகோரும் அயிஸ்லெப்வத்தை கேஷன் பகுதி; தெற்கு : வரையறுக்கப் பட்ட மல்வத்தை பெருந்தோட்ட கம்பனி உரிமைகோரும் அயிஸ்லெப்வத்தை கேஷன் பகுதி மற்றும் தோட்ட வீதி; மேற்கு : தோட்ட வீதி.

EOG 01 - 0078

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

38 ஆம் பிரிவு(அ) வின் கீழான கட்டளை

### 2024 ஆம் ஆண்டின் 111 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல.: 4-3/2/2015/HA/295.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: නා/ඉ/2/අත්/2015/3.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள்,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோ கத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளை யிடுகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“ மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2024, திசெம்பர் 04.

### அட்டவணை

I **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர் நாத்தாண்டிய.

II **காணியின் விபரம்** : வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில் மெத பலாத்த சிறு பிரிவில் 498 - ஏ மீகஹவெல கிராம அலுவலர் பிரிவில் மீகஹவெல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.01.24 ஆம் திகதிய பு.5420 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரிக்கப்பட்ட கீழ்வரும் எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

01. **துண்டு இல. 01 – ஐ 92 - விஸ்தீரணம்: 0.0213 ஹெக்டயார்**
வடக்கு : வீதி; கிழக்கு: கல்கெதி தேவகே நிர்மலா சரோஜனி கருசிங்க உரிமை கோரும் ஐ 92; தெற்கு : கல்கெதி தேவகே நிர்மலா சரோஜனி கருசிங்க உரிமை கோரும் ஐ 92; மேற்கு : பிரதேச சபை மற்றும் வீதி.

EOG 01 - 0079

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.